ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2230/6 - 2021 ජුනි මස 01 වැනි අඟහරුවාදා - 2021.06.01
*2230/6 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்*

*1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின்படி 2021 ஆம் ஆண்டிற்குரிய தேருநர் இடாப்புக்களின் திருத்தம் 2021 யூன் மாதம் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.*

*2.* தற்சமயம் செல்லுபடியாகும் தேருநர் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்களின் பிரதிகளின் பதிவும் அலுவலர்களால், அவர்களின் அலுவலகங்களிலும் கீழ்க்காணும் அலுவலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும்.

| *இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாககங்களின் பிரதிகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள்* | *பார்வைக்கு வைக்கப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள்* |
|---|---|
| ஒவ்வொரு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | தேர்தல் மாவட்டத்திற்கான முழு தேருநர் இடாப்பின் பிரதி ; |
| ஒவ்வொரு பிரதேச செயலகம் | பிரதேச செயலாளர் பிரிவினுள் வதியும் தேருநர்களின் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள் ; |
| ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற அலுவலகங்கள் | ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களினுள் வதியும் சகல தேருநர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள் ; |
| ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம் | கிராம அலுவலர் பிரிவிற்குள் வதியும் எல்லாத் தேருநர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள். |

1A — G 34375 - 60 (2021/05)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk*எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

03. இதன்படி ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் வாக்காளரொருவராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் மேற்கூறப்பட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்புக்களில் பதியப்பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

04. 2021 ஆம் ஆண்டிற்கு தேருநர்களாக பதியப்படுவதற்கு உரிய தகைமையைப் பெற்றிருக்கும் ஆட்களின் விபரங்கள் 2020 ஆம் ஆண்டுக்குரிய தேருநர் இடாப்பினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படவுள்ளதென்பதுடன், கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக கடந்த வருடங்களைப் போன்று தேருநர்களைக் கணக்கெடுக்கும் அலுவலர்களினால் பிரதான குடியிருப்பாளர்களுக்கு பீசீ படிவங்கள் விநியோகம் செய்யப்பட மாட்டாதென்பதுடன், 2021 ஆம் ஆண்டு யூன் 01 ஆந் திகதியன்று நடைமுறையில் உள்ள இடாப்பில் இருந்து 2021 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பில் இருந்து நீக்கப்பட வேண்டியவர்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பில் புதிதாக உட்சேர்க்கப்பட வேண்டியவர்களின் விபரங்கள் விசேட படிவங்களின் மூலம் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்விசேட படிவங்களை மேலே 2 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட காட்சிப்படுத்தப்படும் நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2021 யூன் 01.

06-68